# உங்கள் குழந்தைக்கு 6 மாதங்களாகும் போது செய்யப்படும் உடல்நலப் பரிசோதனை

நீங்கள் வருவதற்கும் முன்பாக இணையதளத்திலுள்ள 'வளர்ச்சி நிலை குறித்த பெற்றோரது மதிப்பீடு' (Parent Evaluation of Developmental Status (PEDS)) எனும் மொழிபெயர்க்கப்பட்ட பிரதியினை www.mhcs.health.nsw.gov.au அச்சிட்டு, அதனைப் பூர்த்திசெய்து எடுத்து வாருங்கள், அல்லது உங்களது குழந்தையின் உடல்நலத் தாதியை உங்களுக்கு உதவுமாறு கேளுங்கள்.

## இன்னும் புகை பிடித்துக் கொண்டுதான் இருக்கிறீர்களா?

'திடீர் சிசு இறப்பு நோய்க்குறி' (Sudden Infant Death Syndrome (SIDS)) எனும் நிலை உங்கள் குழந்தைக்கு ஏற்படும் ஆபத்தினைப் புகைப் பிடிக்கும் பழக்கம் அதிகரிக்கச் செய்யும்.

'புகைப் பிடிக்கும் பழக்கத்தை விட்டொழியுங்கள்' (Quitline) எனும் அமைப்பினை **13 QUIT (13 7848)** எனும் இலக்கத்தில் அழையுங்கள், அல்லது http://www.health.nsw.gov.au/cancer_inst/programs/quitline.html எனும் இணையதளப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

| **செவித்திறன்** | **ஆம்** | **இல்லை** | **உறுதியாய்த் தெரியவில்லை** |
|---|---|---|---|
| உங்கள் குழந்தைக்கு இருக்கும் காது கேட்கும் திறன் குறித்து கவலைப்படுகிறீர்களா? | | | |
| ஒலிகள் அல்லது குரல்கள் கேட்கும் பக்கமாக உங்கள் குழந்தை தன் கண்கள்/தலையைத் திருப்புகிறதா? | | | |
| பேசுவது பொன்ற ஒலிகளை உங்கள் குழந்தை ஏற்படுத்தத் துவங்கியுள்ளதா? | | | |
| மகிழ்ச்சி அல்லது கோபம் போன்ற உணர்வுகளை சிரிப்பு அல்லது சத்தங்கள் மூலம் உங்கள் குழந்தை வெளிப்படுத்துகிறதா? | | | |
| உங்கள் குழந்தைக்குக் காதில் நோய்தொற்றுப் பரவல் (infection) அல்லது காதிலிருந்து நீர் வடிதல் இருக்கிறதா? | | | |
| இடைவிடாத சளி அல்லது/மற்றும் மூக்கிலிருந்து பச்சையான நீர்க்கசிவு போன்றவை உங்கள் குழந்தைக்கு இருக்கிறதா? | | | |
| உங்கள் குழந்தை உங்களது குரலை செவி மடுத்துக் கேட்கிறதா? | | | |
| "டாடா", "பாபா", "மாமா" போன்ற வார்த்தைகளை உங்கள் குழந்தை மழலையாகப் பேசுகிறதா? | | | |
| உங்களது கவனத்தை ஈர்ப்பதற்காக உங்கள் குழந்தை தொனியை மாற்றிக் குரல் எழுப்புகிறதா? | | | |
| "இல்லை" என்று நீங்கள் சொல்லும் போதும், குழந்தையின் பெயர் சொல்லி நீங்கள் அழைக்கும் போதும் குழந்தை பதில் செயல் (response) புரிகிறதா? | | | |
| பாடல் மற்றும் இசை ஆகியவற்றைக் கேட்டு உங்கள் குழந்தை எதிர்ச்செயல் புரிகிறதா? | | | |
| **கண் பார்வை** | | | |
| உங்கள் குழந்தையின் கண் பார்வை குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்களா? | | | |
| உங்கள் குழந்தைக்கு வாக்குக் கண் (turned eye (Squint )) அல்லது செயல்திறன் குறைந்த கண் (lazy eye (strabismus)) இருக்கிறதா? | | | |
| இரு கண்களையும் ஒரே நேரத்தில் உங்கள் குழந்தை திருப்புகிறதா? | | | |
| குழந்தை உங்களைப் பார்க்கிறதா மற்றும் தனது கண்களால் உங்களைத் தொடர்கிறதா? | | | |
| தனது கைகளையோ அல்லது மற்ற பொருட்களையோ குழந்தை பார்க்கிறதா? | | | |
| உங்கள் குழந்தையின் கண்மணிகள் இரண்டும் அல்லது அவற்றில் ஒன்று வெள்ளையாய் இருப்பதைக் கவனித்திருக்கிறீர்களா? | | | |
| உங்கள் குடும்பத்தில் யாருக்காவது பார்வைக் கோளாறுகள் இருக்கின்றனவா? | | | |

# 6 மாதங்கள் ஆகியுள்ள போது யோசிக்க வேண்டிய தலைப்புக்கள்

- இவ் வயதில் உங்கள் குழந்தையிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்க வேண்டிய விடயங்கள்
- குழந்தைப் பாதுகாப்பு
- சூரிய ஒளியிலிருந்து பாதுகாப்பு
- தூக்கப் பிரச்சினைகள்/நடந்து கொள்ளும் விதம்
- மனப்பாங்கு (temperament)
- தடுப்பு மருந்திடல்
- பற்கள்
- உணவூட்டல்
- உடன்பிறந்தோருக்கிடையான போட்டி
- விளையாட்டுச் செயல்கள்
- தாயின் மன நலம்
- குழந்தையுடனான உறவு
- வாழ்க்கைத் துணைவருடனான உறவு
- உடலியக்கம்/செயற்பாடுகள்